1978 மார்ச் 3]

[முற்பகல் 10-10]

(3) ஒழுங்குப் பிரச்னே.

ஒரு பொருள் கொண்ட சில வினக்களுக்கு அவையில் விடையளிப்பதும் அதே பொருள் கொண்ட மற்ருெரு வினவிற்கு விடையை அச்சடித்து வழங்குவதும் குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயின்ட் ஆப் ஆர்டர், நான் எழுப்ப விரும்புவது ஒரு முக்கியமான பிரச்னே. இங்கு பல கேள்விகள் கேட்கப்பட்டு பல மாதங்களுக்குப் பிறகு விடை வருகிறது. அதுவும் பெரும்பான்மையான கேள்விகள் விடைகள் அச்சடித்துக் கொடுத்திருக்கிருர்கள். 200 கேள்விகளுக்கு மேல் அச்சடித்து பதிலேக் கொடுத்திருக்கிருர்கள். இவ்விதம் இல்லாமல் சபையிலேயே கேள்விகளுக்கான சுருக்கமான பதிலே வைக்கலாம். உதாரணமாக 378-ம் எண் கேள்வியை எடுத்துக் கொண்டால், அவையில் எடுத்துக் கொள்ளப்பட்டு பதில் தரப்படுகிறது, ஆனல் அதே பொருள் கொண்ட கேள்விக்கான பதில் அச்சடித்து வைக்கப்படுகிறது. இப்படி ஒரே பொருள் கொண்ட கேள்விகளுக்கு இரு விதமாக பதில் தரப்படுகிறது. அரசாங்கம் மிகுந்த செலவு செய்து இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் தருகிறது. அவற்றையெல்லாம் அச்சடித்துக் கொடுத்து விடாமல், இந்த மன்றத்திலேயே விடைகளே வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை விட எனக்கும் கேள்விகளே விரைவில் கேட்டு முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனல் கேள்விகளேச் கேட்கும் உறுப்பினர்கள் மூலக்கேள்விகளே ஒட்டிக் கேட்காமல் வேறு பல கேள்விகளேக்கேட்கிருர்கள்........பதில்களே அச்சடித்துக் கொடுப்பது சம்பந்தமாக பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் நாம் முடிவு எடுத்து இருக்கிறேம்.......ஆகவே தான்......

திரு. மு. கருணுநிதி : அப்படி ஒரு முடிவு எடுத்திருப்பது உண்மைதான் என்ருலும், திரு. சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்டது, ஒரே மாதிரியான கேள்விக்கு, அதாவது ஒரே பொருள் உள்ள கேள்விக்கு—சில நட்சத்திரக் குறியிட்ட கேள்வியாக அவையில் எடுக்கப்பட்டு பதிலளிக்கப்படுகிறது, ஆனல் அதே பொருள் உள்ள சில கேள்விகளுக்கு பதில்கள் அச்சடிக்கப்பட்டு தரப்படுகிறது. இப்படி ஒரே வகையான கேள்விகளுக்கு இரண்டு முறையாக பதில் தரப்படுவது சரியல்ல என்பதைத்தான் குறிப்பிடுகிருர்.

[1978 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். ஒரே பொருள் உள்ள கேள்விகள் இரண்டு மூன்று முறைகளில் வரக் கூடாது என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இதைப் பற்றி கவனிக்கிறேன்.

(4) கூவத்திலிருந்து வரும் நாற்றத்தால் உறுப்பினர் விடுதியில் தங்கும் உறுப்பினர்களை பாதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான் ஒரு முக்கியமான பிரச்னையை இங்கே கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தங்கள் பணியைச் செய்வதற்கு நான் சொல்வது உதவிகரமாக இருக்கும் என்ற வகையில் தான் இந்த ஒழுங்குப் பிரச்னையை நான் இங்கு எழுப்ப விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பணிகளை செய்ய முடியாத அளவுக்கு அவர்கள் தங்குகின்ற இடத்தில் இருக்கிறது என்பதை நான் அரசுக்கு, அதன் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் 6-வது மாடியில் இருந்தால் கூட, கூவத்தில் இருந்து வருகின்ற நாற்றம் கபாலக் கோட்டைக்குள் இருக்கின்ற மூளையைக் கூட வெளியேக் கொண்டு வருகின்ற அளவுக்கு—அந்த வாடை இரவு நேரங்களில் வருகிறது. இதை சகித்துக் கொண்டு உறுப்பினர்கள் அங்கு இருக்கவே முடியாது. இதற்கு அரசு ஏதாவது செய்ய வேண்டும். ஒன்று இதை மாற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது வேறு இடங்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தர வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நாற்றம் சட்ட மன்ற உறுப்பினர் விடுதிக்குள் வருவதைத் தடுக்க தக்க நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று,

சட்ட மன்ற உறுப்பினர்கள் விடுதிக்குள் யார் யார் தான் வரவேண்டும் என்ற வரையறை இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் போவதற்கும் வருவதற்கும் இடைஞ்சலாக இருக்கின்ற விதத்தில் பல வகையான சூழ்நிலைகள் இருக்கின்றன. இதையும் அரசு கவனிக்க வேண்டும். ஏனென்றால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி மானியக் கோரிக்கை வரும்போது பேசலாம்....

திரு. எம். ஏ. லத்தீப் : என்னுடைய அறையில் இருந்தால் அந்த அளவுக்கு நாற்றம் அடிக்கிறது என்பது மட்டுமல்ல, என்னுடைய அறைக்கு பக்கத்திலுள்ள அறையில் ஒரு திருட்டு நடைபெற்றிருக்கிறது.